திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நன்னிலம் வழியாக விட்டு அதை கும்பகோணத்திலிருந்து இயக்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 185, திருமதி கே. மரியம் உல் ஆசியா, இருக்கையில் இல்லை.

வினா எண் 186, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

186–

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் அணை கட்டுதல்

****9219-திருமதி அ. தி. சரஸ்வதி:***

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் இக்கலூர் கிராமத்தில் ஒழக்கரை என்னும் இடத்தில் அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒழக்கரை என்ற இடத்தில் அணை கட்டும் திட்டம் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்ற பதிலைச் சொன்னாலும், மீண்டும் எனது கேள்வியை மறுபரிசீலனை செய்வார்கள் என்று நம்பிக் கேட்டுக்கொண்டு நான் உங்கள்முன் இந்தக் கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். தாளவாடி வட்டாரத்தின் மொத்தப் பரப்பளவு 490 சதுர கிலோமீட்டர். இதில் நான்கில் ஒரு பங்கு சமவெளிப் பகுதியாகும். இவ்வட்டாரம் 10 ஊராட்சிகளைக் கொண்டதாகும். மொத்தம் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். காலங்காலமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். மலைவாழ்மக்கள், ஆதிதிராவிடர், பழங்குடி இனத்தவர்கள், ஏழை விவசாயிகள், மிகவும் தொழில் வளம் இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்கள் கூலி வேலை செய்துகொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இங்கு பெரும்பாலும் ராகி, கம்பு போன்ற பயிர்களைச் செய்துகொண்டு வாழ்கிறார்கள். மற்றும் தாளவாடி

1994 ஏப்ரல் 5]

மலைப் பகுதிகளில் ஆண்டுதோறும் 1088 மில்லிமீட்டர் மழைபெய்து மழைநீர் வீணாகிக் கொண்டு வருகிறது. இங்குள்ள நெய்தாளபுரம், இக்கலூர், தாளவாடி, திகினாரை, மல்லன்குழி. . . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாளவாடிப் பகுதியினுடைய முழு பூகோள அமைப்பையும் சொல்லவேண்டியதில்லை. அது அமைச்சருக்கே தெரியும். நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி: . . . ஆகிய பஞ்சாயத்துக்களில் இருந்து மழைக்காலத்தில் பல சிறு பள்ளங்கள் மூலமாக ஹெர்ன்னாலா என்ற பெரிய பள்ளம் வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் கர்நாடகாவில் உள்ள சிக்கோலா அணைக்கட்டுக்குப் போய் சேருகிறது. கர்நாடகக்காரர்கள் சிக்கோலா அணையிலிருந்து பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்கிறார்கள். நமது தண்ணீரால் நம் பகுதி மக்கள் பலனடையவேண்டும். ஆகையால் இக்கலூர் பஞ்சாயத்து பாலப்பட்டு, நெய்தாளபுரம், கோடம்பள்ளி, திகினாரை பஞ்சாயத்து ஆகிய பகுதியில் 10,000 ஏக்கர்களுக்கு நீர்பாசனம் அடைய வாய்ப்புள்ளது. நமது மலைப்பகுதியின் தண்ணீரால் நமது விவசாயிகள் பயன்பெறவும், அவர்கள் வாழ்க்கை ஒளிபெறவும், காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்காக உறங்கிக் கொண்டிருக்கும் மத்திய அரசைத் தட்டி எழுப்பி கடுந்தவம் புரிந்து உண்ணாவிரதம் இருந்து வாக்குறுதி பெற, தமிழர் நீர் உரிமை பெற, தன் உயிரையே துச்சமென மதித்து, தமிழ் மக்களுக்காக தன் உடல் வருத்தி தவமிருந்த பொன்விழா காணும் எங்கள் இதயதெய்வத்தின் பொற்கால ஆட்சியில் பொதுப்பணித்துறையில் அனைவரும் போற்றும் அளவுக்கு சிறப்பாக துறையை வழிநடத்திச் செல்லும் ஆற்றல்மிகு அமைச்சர் அவர்கள், இக்கலூர் கிராமத்தில் ஒழக்கரை என்னும் இடத்தில் அணை கட்ட ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த ஒடையினுடைய குறுக்கே ஒரு குளம் அமைப்பதற்காக ரூபாய் ஒரு கோடியே 92 லட்சத்திலே ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலே பரிசீலிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துக் கேட்கப்பட்டபொழுது அந்தக் குளம் அமைக்கப்படுகின்ற பகுதியினுடைய அந்த உத்தேசப் பகுதியின் மேற்புறத்திலே கரை இருப்பதாகவும், நிலங்கள் நிறைய கையகப்படுத்தவேண்டியிருப்பதாலும்–காட்டுப் பகுதிகள் ஏறத்தாழ 35 ஏக்கருக்கு மேல் கையகப்படுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அங்கே தென்னை மரங்கள் மற்ற மரங்கள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் எடுத்து ஒரு அணையைக் கட்டினாலும் கூட, அல்லது ஒரு குளத்தை ஏற்பாடு செய்தாலும் கூட அந்தப் பகுதியில் 511 ஏக்கருக்கு மேலே பாசனவசதி செய்ய முடியுமா என்பதிலும் சந்தேகத்திற்குரிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதில் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதித்தான் அந்தப் பரிசீலனையில் இருக்கிற திட்டமும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே அதற்கான பெனிபிட்-காஸ்ட் ரேஷியோ இல்லையென்ற காரணத்தினால்தான் அது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பதிலாக குளங்களை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, கசிவு நீர்க்குட்டைகளைக் கட்டலாம் என்று ஒரு மதிப்பீடு தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் செய்யலாமா என்பதை அரசு பரிசீலித்து வருகிறது. ஆகவே கசிவு நீர்க்குட்டைகள் அந்த ஓடையில் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கசிவுநீர்க் குட்டை கட்ட ஏற்பாடு செய்யப்படும் என்று கூறியதற்கு மிகவும் நன்றி. அவர்கள் இந்த ஆண்டே அந்தப் பணியைத் துவங்க ஆவன செய்வார்களா என பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களும் இந்த ஆண்டே எடுக்க வேண்டும், இந்த ஆண்டே எடுக்க வேண்டும் என்று சொன்னால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மனம் இருக்கிறது; ஆனால், பணம் வேண்டும். ஆகவே, இருக்கின்ற திட்டங்களில் முன்னுரிமை கொர்டுத்துத்தான் எடுக்க முடியும். தமிழகம் முழுவதும் திட்டங்களை எடுக்கின்றபோது, இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்து முன்னுரிமை கொடுத்து, எந்தத் திட்டங்களின் அடிப்படையில் எடுக்க முடியுமோ அதைத்தான் எடுக்க முடியும். இந்தத் திட்டத்திற்கும் ஒரு முன்னுரிமை கொடுத்து, அதற்காக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 187, திரு ஆர். கோடிமாரி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.